T **முதல் இடைப் பருவ பொதுத் தேர்வு - ஜூலை 2018**

**பதினொன்றாம் வகுப்பு** பதிவு எண் | | | | | | |

**தமிழ்**

*நேரம்: 1.15 மணி* *மதிப்பெண்கள்: 45*

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** **10×1=10**

1. பாயிரம் இல்லது .............. அன்றே
   அ) பாடல் ஆ) காவியம் இ) கவிதை ஈ) பனுவல்
2. பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுக்க:
   அ) அ.முத்துலிங்கம் - யுகத்தின் பாடல் ஆ) பவணந்தி முனிவர் - நன்னூல்
   இ) சு. வில்வரத்தினம் - ஆறாம் திணை ஈ) இந்திரன் - பேச்சுமொழியும் எழுத்துமொழியும்
   (i) அ, ஆ (ii) அ, ஈ (iii) ஆ, ஈ (iv) அ, இ
3. மொழி முதல் எழுத்துகள் எத்தனை?
   அ) 21 ஆ) 22 இ) 23 ஈ) 24
4. பனியும் பனி சார்ந்த நிலமும்
   அ) குறிஞ்சி ஆ) முல்லை இ) நெய்தல் ஈ) ஆறாம் திணை
5. "பாஸ்போர்ட்" என்ற சொல்லின் தமிழாக்கம்
   அ) நுழைவுச்சீட்டு ஆ) கடவுச்சீட்டு இ) பயணச்சீட்டு ஈ) விரைவுச்சீட்டு
6. உலக சிட்டுக்குருவிகள் நாள்
   அ) சனவரி 15 ஆ) மார்ச் 15 இ) மார்ச் 20 ஈ) ஏப்ரல் 20
7. தொல்காப்பியர் கூறும் புலன் எனும் இலக்கிய வகையைச் சார்ந்தது
   அ) தூது ஆ) பரணி இ) குறவஞ்சி ஈ) பள்ளு
8. வேற்றுநிலை மெய்ம்மயக்கம் எது?
   அ) அப்பம் ஆ) தேர்தல் இ) தேர்க்கால் ஈ) எச்சம்
9. ஒப்புரவு என்ற சொல்லின் பொருள்
   அ) அடக்கம் ஆ) பண்பு இ) உதவுவது ஈ) செல்வமுடையது
10. காவடிச் சிந்துக்குத் தந்தை
    அ) பாரதிதாசன் ஆ) அண்ணாமலையார் இ) முருகன் ஈ) பாரதியார்

**II. பின்வரும் வினாக்களுள் எவையேனும் நான்கினுக்கு ஓரிரு வரிகளில் விடை தரவும் : (வினா எண் : 16 கட்டாய வினா)** **4×2=8**

11. 'உலகம்', 'நான்' என்பது குறித்து எர்னஸ்ட் காசிரா' கூறுவது யாது?
12. பாயிரத்திற்குரிய பெயர்கள் ஏதேனும் நான்கினை எழுதுக.
13. தொழு உரம் என்றால் என்ன?
14. அறிஞர் மசான புஃபுகோகாவின் விவசாய மந்திரங்கள் ஐந்து யாவை?
15. பகுபத உறுப்புகள் எத்தனை அவை யாவை?
16. 'வடு' என முடியும் குறட்பாவை எழுது.

**III. பின்வருவனவற்றுள் ஏதேனும் நான்கினுக்குக் குறுகிய விடை தருக: (வினா எண் : 22 கட்டாய வினா)** **4×3=12**

17. தமிழ்ப் பண்பாட்டின் அடையாளம் காவடிச் சிந்து என்பதை நிறுவுக.
18. "சலச வாவியில் செங்கயல் பாயும்' – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
19. தமிழ் நெடுங்கணக்கு வரிசையில் இனவெழுத்துகளின் பங்கைக் குறிப்பிடுக.
20. சு. வில்வரத்தினம் பாடிய பல்லாண்டு வாழ்த்து தமிழ்த்தாய்க்கு எங்ஙனம் பொருந்துகிறது?
21. சொற்பொருள் பின்வருநிலையணியை விளக்குக.
22. புணர்ச்சி விதி தருக : அருவினை, செங்கயல்

**IV. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு விரிவான விடை தருக: (வினா எண் : 25 கட்டாய வினா)** **3×5=15**

23. 'சுற்றுச் சூழலை வளப்படுத்துவது இயற்கை வேளாண்மையே' என்னும் தலைப்பில் உனது கருத்துக்களைக் கூறுக.

**(அல்லது)**

யானை டாக்டர் கதை வாயிலாக இயற்கை, உயிரினப் பாதுகாப்பு ஆகியவை பற்றி நீவிர் அறிந்தவற்றை விவரி.

24. தமிழர் வாழ்வோடும் புலம் பெயர் நிகழ்வுகளோடும் அ.முத்துலிங்கத்தின் திணைப் பாகுபாடு எவ்வாறு இணைக்கப்படுகிறது?

**(அல்லது)**

கொடையில் சிறந்து விளங்க வள்ளுவம் கூறும் வழிகளை ஒப்புரவறிதல் அதிகாரம் வழி நிறுவுக.

25. சு. வில்வரத்தினத்தின் 'என் அம்மை' எனத் தொடங்கும் யுகத்தின் பாடலை எழுதுக.

**(அல்லது)**

'உண்டால் அம்ம இவ்வுலகம்' என்ற புறநானூற்றுப் பாடலை எழுது.

--------